

நேற்று (25.06.2024) போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் 2024–2025 ஆம்ஆண்டிற்கான போக்குவரத்துத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



நேற்று (25.06.2024) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் 2024–2025 ஆம்ஆண்டிற்கான சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



நேற்று (25.06.2024) சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் 2024–2025 ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



நேற்று (25.06.2024) ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் 2024–2025 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

### திருவண்ணாமலை

# அண்ணாமலை கோவிலுக்கு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டுள்ளதா?

## பேரவையில் கு.பிச்சாண்டி வினா!

சென்னை, ஜூன் 26 -

திருவண்ணாமலை, அண்ணாமலையார் கோவிலுக்கு 'மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டிருக்கிறது' - என்று சட்டப் பேரவையில் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி வினா எழுப்பினார்.

சட்டமன்றப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி எழுப்பிய வினா வருமாறு:-



**கு.பிச்சாண்டி :** எனது கீழ்ப் பெண்ணாத்தூர் தொகுதியிலே கருங்காலி குப்பம் பெருமாள் கோயில், அதே போல கீழாத்தூர் கோயில், சொரகுளத்தூர் கோயில் ஆகியவற்றில் பணிகள் பாதியளவே நடைபெற்று கும்பாபிஷேகம் நடைபெறாமல் இருக்கிறது. அதை விரைந்து நடைபெறுவதற்கும் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலுக்கு மாஸ்டர் பிளான் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கிறதா, திருச்செந்தூர், பழனியை போல மிக அதிக அளவில் தெலுங்கானாவிலும், ஆந்திராவிலிருந்தும் பல லட்சக்கணக்கான மக்கள் தினசரி வருகை தந்து கொண்டிருக்கும் காரணத்தால் அதற்கான மாஸ்டர் பிளானை தயாரித்து வேண்டிய வசதிகளை பக்தர்களுக்கும், அங்கே ஊரில் இருக்கக்கூடியவர்கள் வீடுகளை கூட செல்ல முடியாத ஒரு சூழல் இருக்கின்றது ஆக அந்த முழுமை திட்டத்தை தயாரித்து திருவண்ணா மலை அண்ணாமலையார் கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கான வசதிகளை செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா, அதேபோல கோயில்களிலே செலுத்தப்பட்ட தங்க காணிக்கைகளை கட்டிகளாக உருவாக்கி வங்கிகளில் எந்தெந்த கோயிலுடைய தங்கங்கள் அப்படி டெபாசிட் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தொடர்ந்து அந்த பணிகளை நம்முடைய அறநிலையத்துறை செய்யுமா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயிலை பொறுத்தளவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நேரடி பார்வையில் அந்த மாவட்டத்தின் அமைச்சர் வேலு 10 நாட்களுக்கு ஒரு முறையாவது ஆய்வு கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்.

அந்த வகையில் முதல் கட்ட மாஸ்டர் பிளான் என்பது சுமார் 36 கோடியே 41 லட்சம் ரூபாயில் ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அந்த திருக்கோயிலுக்கு ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருந்து பௌர்ணமி தினத்தில் சுமார் 30 லட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் வந்து செல்கின்ற நிலை உள்ளது. இதை கருத்தில் கொண்டு இரண்டாவது மாஸ்டர் பிளான் திட்டத்தில் பக்தர்களுக்கு தேவையான தங்கும் இடவசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, இந்து சமய அறநிலைத்துறை அறிவிப்பில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட உள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவை துணைத்தலைவர் தங்க முதலீட்டு திட்டம் குறித்து கோரினார்கள். இந்த திட்டத்தை முதலில் கொண்டு வருகின்ற போது இந்த துறைக்கு ஏற்படுத்தாத அவமானங்களே இல்லை. அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து தங்க முதலீட்டு திட்டத்தில் 13 திருக்கோயில்களிலிருந்து பெறப்பட்ட 257 கோடியே 22 இலட்சத்து 36 ஆயிரத்து 910 ரூபாய் மதிப்பிலான 442 கிலோ 107 கிராம் 030 மில்லிகிராம் எடை கொண்ட தங்கக் கட்டிகள் பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டிற்கு ரூ. 5 கோடியே 79 இலட்சத்து 12 ஆயிரத்து 671 ரூபாய் வட்டித் தொகையாக கிடைக்கப் பெறுகிறது. இந்த வட்டித் தொகை அந்தந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கும், பக்தர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற பணிக்கும் பயன்படுத்தப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதிலளித்தார்.

### தேர்தல் சமயத்தில் இடஒதுக்கீடு பற்றி பேசுபவர் டாக்டர் ராமதாஸ்: 10.5 சதவிகித இடஒதுக்கீடு

# ஏழை வன்னியர் சமூகத்தினர் படிப்பதைத் தடுக்கிறது என்பதே உண்மை!

## சட்டப்பேரவையில் - போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் விளக்கம்!

சென்னை, ஜூன் 26-

சட்டப்பேரவையில், நேற்று போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், "10.5 சதவிகித இடஒதுக்கீடு, ஏழை வன்னியர் சமூகத்தினர் படிப்பதைத் தடுக்கிறது என்பதே உண்மை!" மேலும் அவர், தேர்தல் சமயத்தில் எல்லாம் டாக்டர் ராமதாஸ் இடஒதுக்கீடு பற்றி பேசுவார் என்றும் விளக்கமளித்தார்.

சட்டப்பேரவையில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், இதுகுறித்து குறிப்பிட்டதாவது :

இந்தத் துறைகள் தொடர்பான மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்ததைப்போல, இரண்டு நிமிடங்கள் வேறொரு செய்தியையும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

நேற்றைய தினம், உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் இங்கே பேசியதற்கு பதிலளித்துப் பேசியிருந்தேன். அவ்வாறு பதிலளித்துப் பேசியதற்கு எதிர்வினையாக இன்றைக்கு திண்டிவனத்திலிருந்து ஒரு குரல் ஒலித்திருக்கிறது. போக்குவரத்துத் துறை அமைச்சருக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டிருக்கி றார்கள். ஓர் அமைச்சரவை என்பது கூட்டுப் பொறுப்பு வாய்ந்தது. தெரிந்த கருத்துகளை இங்கே பதிவு செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, அந்தக் குரலுக்குச் சொந்தமானவருக்கு சொல்லிக்கொள்கிறேன்: போக்குவரத்துத் துறை அமைச்சராக இருப்பது மாத்திரம் தகுதி அல்ல; திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு



தொண்டன் என்ற முறையில் சமூக நீதிக் கொள்கைகளை, எங்களது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் செய்தவற்றை இங்கே பதிவு செய்ய வேண்டியது எங்கள் கடமை. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இதற்கு என்ன புள்ளிவிவரங்கள் இருக்கின்றன என்று கேட்டிருக்கிறார்கள். மற்ற புள்ளிவிவரங்கள் குறித்தெல் லாம் நீங்கள் ஓரிடத்திற்கு வாருங்கள், நேரடியாக விவாதித்துக்கொள்ளலாம். நான் ஆதாரத்தோடு பேசுகிறேன். ஒரேயொரு சிறு புள்ளிவிவரம், எல்லோருக்கும் புரிகிற வகையில் நான் சொல்லிவிடுகிறேன். 20 சதவிகித இட ஒதுக்கீட்டை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்திருக்கிற காரணத்தினால், திண்டிவனத்தில் இருக்கக்கூடிய ஓர் அரசு கலைக் கலைக் கல்லூரியில் சேர்க்கை நடைபெற்றபோது, 100 பேர் சேர்ந்தார்களென்றால், அதில் 20 சதவிகித இட ஒதுக்கீட்டின் படி 20 மாணவர்கள் MBC எனப்படுகின்ற மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த வன்னியர்கள் சேர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் சொல்கிற 10.5 சதவிகித இட ஒதுக்கீடு வந்தால், 20 பேர் சேர முடியாது. 10 பேர்தான் சேர முடியும். எனவே, இழப்பு யாருக்கு?

வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த படிக்க வருகின்ற இளைஞர்களுக்கு அது மிகப் பெரிய இழப்பு. அதேபோல, தென்மாவட்டத்தில் இந்த MBC தொகுதியில் இருக்கின்ற சீர்மரபினர்கள் அங்கே முழுமையாகச் சேரமுடியும். இந்த 10.5 சதவிகிதம் அங்கே போகின்றபோது அந்த 10.5 சதவிகிதத்தில் அங்கே சேர்வதற்கு ஆள் இல்லாமல் யாருக்கும் பயனில்லாமல் ஒரு பாதகமான சூழல் ஏற்படும். இங்கிருந்துபோய் தென் மாவட்டங்களுக்கு 200 கிலோ மீட்டர், 300 கிலோ மீட்டர் போய் படிப்பதற்கான ஒரு வசதி வாய்ப்புகளோடு இருந்திருந்தால், அவர்கள் தனியார் கல்லூரிகளிலேயே படித்துவிடுவார்கள்.

வன்னியர் சமூகத்தைப் பொறுத்தவரை, இந்தப் பகுதியில் இருப்பவர்கள் ஏழைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் படிப்பதைக்கூட, தடுப்பதாகத்தான் இந்த 10.5 சதவிகிதம் இருக்கிறது. மற்ற வேலைகளுக்குப் போவது போன்றவற்றையெல்லாம் பின்னர் பேசிக்கொள்ளலாம். இதற்கு இந்தத் தேர்தல் நேரத்தில் இவர்கள் இதை வைத்துப் பேசுவார்கள் என்று எண்ணித்தான் நான் நேற்றே அந்த விளக்கத்தைச் சொன்னேன். அந்த விளக்கத்திற்கு அவர் புதிய வடிவம் கொடுக்க விழைந்தார். நான் கேட்கின்ற இந்தக் கேள்விக்கு simple ஆன கேள்விதான். நீங்கள் படிப்பை நிறுத்துகிறீர்கள். இந்த 10.5 சதவிகிதம் யாருக்குப் பயன் தரப்போகிறது? யாருக்கும் பயன் இல்லை. எனவே, தேவையில்லாமல் அதை விதண்டாவாதம் செய்யாமல் விட்டுவிட்டு, முதலமைச்சர் அவர்கள் அதை சட்டபூர்வமாக ஏற்பாடு செய்வதற்கு அவை முன்னவர் அவர்களைக் கொண்டு, அமைச்சர் அவர்களைக் கொண்டு, வழக்கறிஞர்களைக் கொண்டு, மிகச் சிறப்பான முறையிலே அதுகுறித்து விவாதித்தார்கள்.

ஆனால், அதிலே என்ன உண்மை இருக்கிறது என்பதை நான் வெளிப்படுத்திய காரணத்தினால் இன்றைக்கு டாக்டர் ராமதாஸ் அவர்கள் துடிக்கிறார்கள். உண்மை இதுதான். இது நீங்கள் சொல்வது. அந்த மக்களை தேர்தல் நேரத்தில் உங்கள் வழிக்கு கொண்டு வருவது. தேர்தல் முடிந்தால் 10.5 சதவிகிதம் பற்றிப் பேசுவதை விட்டு விட்டு அடுத்த வேலைக்குப் போய்விடுகிறீர்கள். எப்போது நாடாளுமன்றத் தேர்தல் வருகிறதோ, சட்டமன்ற தேர்தல் வருகிறதோ, இடைத் தேர்தல் வருகிறதோ, அப்போது மாத்திரம் தான் உங்களுக்கு அது நினைவு வரும்.

ஆனால், திராவிட முன்னேற்றக் கழக அரசு அப்படியல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) என்றைக்கும் சமூக நீதி பேசுகிறவர்கள் நாங்கள். சமூக நீதிக்கு authority என்றால் தலைவர் கலைஞர் அவர்கள்தான். We are the authority of Social justice. எனவே, நாங்கள் சொல்வதை மக்கள் உணர்வார்கள். நியாயத்தை உணர்வார்கள். இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் குறிப்பிட்டார்.

### திருவள்ளூர் நகராட்சியில் 13, 14, 17, 18 மற்றும் 20 உள்ளிட்ட

# 5 வார்டுகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

## சட்டப்பேரவையில் வி.ஜி.இராஜேந்திரன் கேள்வி

சென்னை, ஜூன் 26

திருவள்ளூர் நகராட்சியில் 13, 14, 17, 18 மற்றும் 20 ஆகிய வார்டுகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா? என்று உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**வி.ஜி.இராஜேந்திரன்:** திருவள்ளூர் நகராட்சியில் 13, 14, 17, 18 மற்றும் 20 வது வார்டுகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் கே.என். நேரு:** திருவள்ளூர் நகராட்சியில் தற்போதைய மக்கள் தொகை 64,082 ஆகும். தற்போது இந்நகராட்சியில் 13 எண்கள் மேல்நிலைத்தொட்டிகள் 43.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவில் உள்ளது. இதன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வார்டு எண்கள் 13, 14, 17, 18 மற்றும் 20-வது வார்டுகளில் நகராட்சிக்கு சொந்தமான இடம் ஏதும் இல்லாததால் வருவாய் துறையினரி டம் நிலம் கோரி, பெறப்பட்டு மேல்நிலை நீர்த்தேக் கத் தொட்டி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**வி.ஜி.இராஜேந்திரன்:** தமிழ்நாட்டில் 'நூற்றுக்கு நூறு' வெற்றியை வாங்கித் தந்த எங்கள் தலைவர், முதல்வர் அவர்களை வணங்குகிறேன். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவள்ளூர் நகராட்சியிலே, இன்றைக்கு அதிகரித்து வரும் மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாக குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. அங்கு பூங்காக் கள் இருக்கின்ற பகுதி 14, 16, 17, 18 வார்டு எண்களில் உள்ள பூங்காக்கள், அதுமட்டுமல்லாமல் layoutல் வருகின்ற excess land இருக்கக்கூடிய பகுதிகளில் இருக்கிற இடத்தை எடுத்து, குடிநீர்த் தொட்டிகள் கட்டித்தர வேண்டுமென்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** அதிகாரிகள் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு, பூங்காக்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு இடம் இருக்குமானால், உடனடியாக அந்தப் பணி தொடங்குவதற்கு, முதலமைச்சர் அவர்களுடைய ஆணையைப் பெற்று அந்தப் பணி தொடங்கப்படும். தண்ணீரை சீராக விநியோகம் செய்வதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வி.ஜி. இராஜேந்திரன்:** திருவள்ளூர் நகருக்கு, வள்ளியூர் பகுதியிலிருந்து கிட்டத்தட்ட 16 கிலோ மீட்டர் pipe போட்டு தண்ணீர் எடுத்து வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்த pipe அமைத்து கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் கடந்து, இப்போது அங்கு highways road போடப்பட்டிருப்பதால், அந்த pipeல் பாதிப்பு ஏற்பட்டு, உடைந்து தண்ணீர் கசிவு ஏற்பட்டிருக்கிறது. அந்த pipe முழுவதும் மாற்றி அமைத்தால் கசிவு ஏற்படாது. நகருக்கு வரக்கூடிய குடிதண்ணீரும் மக்களுக்கு பயன்படும் வகையில் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், திருவள்ளூர் நகராட்சிப் பள்ளிக்கு புதிய கட்டடம் வேண்டுமென்று கேட்டு, அதற்கான இடத்தை 50 ஆண்டுகள் ஆக்கிரமிப்புகளிலிருந்து மீட்டெடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பள்ளிக் கட்டடம் கட்டிக் கொண்டிருக்கிறோம். அந்த தொகை போதுமானதாக இல்லை. 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கினால் ஒரு modern classroom, smart classroomஉடன் சேர்த்து அந்தப் பள்ளியை அமைக்க முடியும். அதனால் அதற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, திருவள்ளூர் நகராட்சிக்கு புதிய கட்டடம் கட்டித்தருமாறு அன்போடு கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** புதிதாக திருவள்ளூர் நகராட்சிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்காக, கடந்த ஆண்டு முடிவு செய்யப்பட்டு அதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு புதிய கட்டடம் கட்டுவதற்குரிய அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு, இந்த ஆண்டு அந்தக் கட்டிடம் கட்டித் தரப்படும். திருவள்ளூரில் இருக்கிற நம்முடைய நகராட்சிப் பள்ளியை சீரமைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டு, அதற்காக 2.49 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பப்பட்டிருக்கிறது. இப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 5 கோடி ரூபாய்க்குமேல் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் அதிகப்படுத்தி தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். பள்ளிக் கட்டடம், திரு வள்ளூர் நகராட்சிக்குரிய கட்டடம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அந்தப் பணிகள் இந்த ஆண்டு அவர்களுக்கு செய்துத் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பழைய குழாய்களை மாற்றியமைத்து புதிய குழாய்கள் அமைத்துத் தர வேண்டும் கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) பைப்லைன். திருவள்ளூர் மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக, அதாவது ஆவடியை எடுத்துக்கொண்டால், உறுப்பினர் திரு. நாசர் அவர்கள், "எங்களுடைய ஆவடி நகராட்சியில் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது" என்று கூறியிருக்கி றார்கள். நேற்றுகூட, உறுப்பினர் துரை. சந்திரசேகர் பேசியபோது, "மீஞ்சூர் பகுதியில் தண்ணீர் முழுமையாக உப்பாக இருக்கிறது" என்று கூறியிருக்கிறார்கள். அவையனைத்திற்குமே விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிதிக்காக பணி தாமதப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

தற்போது தொடங்கப்பட்டிருக்கின்ற புதிய பணிகள் பற்றிய விவரத்தை உங்களுக்குச் சொல்ல நான் விரும்பு கிறேன். திருவள்ளூர் மாவட்டத்தில், ஆவடி மாநகராட்சி, 6 நகராட்சிகள், 8 பேரூராட்சிகள் மற்றும் 3,862 ஊரகக் குடியிருப்புகள் உள்ளன. திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அனைத்து நகரக் குடியிருப்புகளுக்கும், உள்ளாட்சி அமைப்புகள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 168 ஊரகக் குடியிருப்புகளுக்கு 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் 1.5 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் 4.76 MLD குடிநீர் வழங்கப்படுகிறது. மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் அளவை உயர்த்தி வழங்கும் பொருட்டு, பராமரிப்பிலுள்ள 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் ரூ.14.88 மதிப்பீட்டில் மறுசீரமைப்பு செய்து, தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் 5.81 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

நம்முடைய தளபதி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இந்த 3 ஆண்டு காலத்தில், பூண்டி ஒன்றியத்தில் வேலகாபுரம், மாமண்டூர் ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.3.18 கோடி மதிப்பீட்டிலும், திருவாலங்காடு ஒன்றியத்தில் நல்லாட்டூர், என்.என்.கண்டிகை மற்றும் பூனிமாங்காடு ஆகிய ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.4.4 கோடி மதிப்பீட்டிலும், திருத்தணி நகராட்சிக்கு தனி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.109.68 கோடி மதிப்பீட்டிலும் என ஆக மொத்தம் 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.116.90 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு, 81 ஆயிரம் மக்களுக்கு 8.15 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பூண்டி ஒன்றியத்தில் அம்மம்பாக்கம் மற்றும் கூனிப்பாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.3.6 கோடி மதிப்பீட்டிலும், திருத்தணி மற்றும் ஆர்.கே. பேட்டை ஒன்றியத்தில் செருக்கனூர் மற்றும் 114 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.44.28 கோடி மதிப்பீட்டிலும் என ஆக மொத்தம் 2 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.47.92 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் விரைவாக முடிக்கப்பட்டு, 59 ஆயிரம் மக்களுக்கு 3.18 MLD குடிநீர் வழங்கப்படும்.

மேலும், தேர்வாய்க்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து மீஞ்சூர் மற்றும் சோழவரம் ஒன்றியங்களுக்கு ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக திட்ட மதிப்பீடு சுமார் ரூ.400 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், நேமம் ஏரியை நீராதாரமாகக் கொண்டு பூந்தமல்லி, கடம்பத்தூர் மற்றும் வில்லிவாக்கம் ஒன்றியங்களுக்கு குடிநீர் வழங்க ரூ.110 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

நம்முடைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் பொறுப்பேற்பதற்கு முன்பு, தமிழ்நாட்டில் 428 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக 4.18 கோடி மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. இப்போது இந்த 3 ஆண்டுகாலத்தில் மேலும் 1.5 கோடி மக்களுக்கும் இன்னும் 6 மாத காலத்தில் 1.15 கோடி மக்களுக்கும், இந்த ஆண்டு தரப்பட்டிருக்கின்ற திட்டங்கள் நிறைவேறுமானால், 7 கோடி மக்களுக்கான குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுவிடும். மீதமுள்ள 1 கோடி மக்களுக்குத்தான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும். அதற்காகவும் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. நம்முடைய தளபதி அவர்களுடைய ஆட்சியிலேயே விரைவில் 8 கோடி மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுவிடும். அதற்கான அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. திருவள்ளூர் தொகுதிக்குத் தேவையான அத்தனை திட்டங்களும் நம்முடைய தளபதி அவர்களுடைய அனுமதியைப் பெற்று நிறைவேற்றித் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் காணை தெற்கு ஒன்றிய தேர்தல் பொறுப்பாளர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி வழிகாட்டுதலின்படி, கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, சென்னை மேற்கு மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட வீரமூர் ஊராட்சி மற்றும் டட் நகர் ஊராட்சியின் தேர்தல் பணிமனையில், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் BLA 2 மற்றும் BLC களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேர்தல் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை செய்து, இந்தியா கூட்டணியின் வேட்பாளரை அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற செயலாற்ற வேண்டும் என்று கழகத்தின் நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.



சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 51வது வட்டத்தின் சார்பாக க.கோவிந்தராஜ் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகளை ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வழங்கினார். மாநில மாணவர் அணி தலைவர் க.ராஜீவ்காந்தி, டாக்டர் கலாநிதிவீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, இரா.செந்தில்குமார், உடன் எஸ்.குமார், ப.சோமசுந்தரமூர்த்தி, லோ.மோகன், அத்தோ பி.முனுசாமி, வி.குமார், க.கலைச்செல்வன், என்.பாரி, எம்.என்.வெங்கட், வி.வி.தங்கராஜ், இரா.முருகன், க.சுரேஷ் , நாகம்மை, அணிபா, கே.எஸ்.குமார், பிரபாகரன், ஆனந்த், எஸ்.சீனிவாசன், பி.என்.கிருஷ்ணன், ஜி.சதீஷ்குமார், இரா.பாலன், பி.கண்ணன், மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஜி.உமாபதி, பி.எஸ். நாராயணன் ஆகியோர் நன்றி கூறினர்.